நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
சென்னை—5

ந.க.எண். 38714 / 2009/ ஆர்—1 நாள். 2.4.09

# சுற்றறிக்கை

பொருள்: காலியிட வரி — கோயம்புத்தூர் மாநகராட்சி — காலிநிலவரி விதிப்பு தொடர்பாக தெளிவுரை வேண்டியது — சம்பந்தமாக.

பார்வை: 1. ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கடிதம் ந.க.எண் 16559/ 08/ B —13 நாள். 26.3.09

*****

காலிமனை வரிவிதிப்பு தொடர்பாக தெளிவுரை வழங்குமாறு பார்வையில் காணும் கடிதத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரால் கோரப்பட்டுள்ளது. மேற்படி காலிமனை வரிவிதிப்பு தொடர்பாக பின்வருமாறு தெளிவுரை வழங்கப்படுகின்றது.

1981—ம் வருடத்திய கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் பிரிவு 168 மற்றும் 1920—ம் வருடத்திய மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 117—எ—ன்படி காலிமனைவரி, சொத்துவரி ஆகியவை விடுப்பட்டிருந்தால் ஆறு ஆண்டுகள் வரை முன் தேதியிட்டு, வரிவிதிப்பு செய்யப்படும் அரையாண்டுக்கான வரியையும் சேர்த்து 13 (பதிமூன்று) அரையாண்டுகளுக்கு வரிவிதிப்பு செய்யப்படவேண்டும்.

காலி மனை வரியை பொறுத்தவரை எந்த அரையாண்டு முதல் வரி விதிப்பு செய்யப்படுகின்றதோ அந்த அரையாண்டில் பத்திரப்பதிவு அலுவலகத்தில் வழிகாட்டு மதிப்பைப்பெற்று ( guidelines value ) வரி விதிப்பு செய்யப்படவேண்டும்.

மேலும், காலிமனை வரிவிதிப்பு சதுர அடி மதிப்பில் வரிவிதிப்பு செய்வது தொடர்பாக புதிய சட்டத் திருத்தம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதனையும் தெரிவிக்கப்படுகின்றது.

ஒம்/— து. சந்திரசேகரன்,
நகராட்சி நிர்வாக இயக்குநருக்காக.

பெறுநர்:-

அனைத்து நகராட்சி ஆணையர்கள்/ செயல் அலுவலர்கள்.
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்
அனைத்து நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர்கள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

2.4.09
கண்காணிப்பாளர்

2/4/09